தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 18.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 3945/D/2020**

| | | |
|---|---|---|
| திரு G. ஜெயபால் | --- | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,<br>கும்பகோணம் நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டம். | --- | பொது அதிகார அமைப்பு |

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 17.02.2020 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 19.03.2020 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 10.04.2020 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 07.05.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ஹேமலதா, மேலாளர், கும்பகோணம் நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கும்பகோணம் நகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், கும்பகோணம் நகராட்சி பழைய வரி விதிப்பு எண்.6104, சர்வே எண்.830, வார்டு எண்.3 வரிவிதிப்பாளர் ஒருவர் எந்த ஆண்டு முதல் வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டது, அதற்கான நகராட்சி ஆவண பதிவின் சான்றிட்ட ஒளி நகல், இது தொடர்பாக அவரிமிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் ஒளி நகல் மற்றும் RC.No.17082/04 Date 22.07.2004 நாளிட்ட TSLR-ன் வரைபட ஒளி நகல் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 3 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகவும், அவர் கோரும் தகவல்களான வார்டு எண், கதவு எண், தெருவின் பெயர் உள்ளடக்கிய விவரங்களை தெளிவாக கோரினால் தகவல்களை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், மனுதாரர், அலுவலக வேலை நாட்களில் கும்பகோணம் நகராட்சி அலுவலகத்திற்கு நேரடியாக சென்று தேவையான தகவல்களை தெளிவாகக் கோரி பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். அவ்வாறு மனுதாரர், கும்பகோணம் நகராட்சி அலுவலகத்தை அணுகும் பட்சத்தில், மனுதாரருக்கு தகவல்கள் வழங்க கும்பகோணம் நகராட்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3945/D/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
கும்பகோணம் நகராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு G. ஜெயபால்,
எண்.19, பேட்டை வடக்கு மேலத்தெரு,
கும்பகோணம் - 612 001,
தஞ்சாவூர் மாவட்டம்.

Copy to: File
SNPA 19.11.2020